## ஈரோடு - நாமக்கல்லைச் சேர்ந்த பல்வேறு சங்கங்கள், முக்கிய அமைப்புகள், பிரமுகர்கள்

# கழகத் தலைவர் முதல்வர் - மு.க.ஸ்டாலினைச் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர்!













**ஈரோடு, ஏப்.2–**

**கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு சங்கங்கள் மற்றும் அமைப்புகளை சார்ந்தவர்கள் நேற்று முன்தினம் (31.03.2024) சந்தித்து தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்தனர். அது விவரம்:–**

1.தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் எல்.கே.எம். சுரேஷ்

2. ஈரோடு ஆடை வணிகர்கள் சங்க தலைவர் சிதம்பரம் சரவணன்

3. அனைத்து ஜவுளி பதனிடும் தொழிற்சங்கம் தலைவர் முருகேசன்

4. கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கம் தலைவர் ராமசாமி

5.ஈரோடு மாவட்ட முஸ்லீம் ஜமாத் தலைவர் அபுபக்கர்

6.ஈரோடு மாவட்ட தொழிற் வணிக சங்க கூட்டமைப்பு தலைவர் ராஜமாணிக்கம்

7.ஒளிரும் ஈரோடு எடிசியா அமைப்பின் தலைவர் மூர்த்தி

8.ஈரோடு மாவட்ட வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாவட்ட தலைவர் சண்முகம்

9.அண்ணா திராவிட மக்கள் முன்னேற்ற கழக மாநில பொது செயலாளர் பசும்பொன் பாண்டியன்

10. தமிழ்நாடு கோழி பண்ணை உரிமையாளர்கள் சங்கத் தலைவர்சிங்கராஜ்

11.தமிழ்நாடு கோழி பண்ணை வணிகர்கள் கூட்டமைப்பு தலைவர் சுப்ரமணி

12.தமிழ்நாடு முட்டை ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர்பன்னீர்செல்வம்

13.நாமக்கல் மாவட்ட ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர் பரந்தாமன்.

14.தென்னிந்திய விவசாய ரிக் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் பாரி கணேசன்

15. ஆம் ஆத்மி கட்சியின் ஈரோடு மாவட்ட தலைவர் திருமதி சுனிதா

16. திருச்செங்கோடு லாரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் மூர்த்தி

17.ஈரோடு மாவட்ட குலாளர் மண்பாண்ட தொழிலாளர்கள் சங்கத் தலைவர் கனகராஜ்

இந்த நிகழ்வின்போது, அமைச்சர் முத்துசாமி, தி.மு.க. துணைப் பொது செயலாளர் அந்தியூர் செல்வராஜ், முன்னாள் ஒன்றிய அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் பொது செயலாளர் ஈஸ்வரன், நாமக்கல் மாவட்ட செயலாளர்கள் ராஜேஷ்குமார், மதுரா செந்தில், ஈரோடு மக்களவைத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் பிரகாஷ், நாமக்கல் தொகுதி தி.மு.க. கூட்டணி வேட்பாளர் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் மாதேஸ்வரன் ஆகியோர் உடனிருந்தனர்.



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு நாடாளுமன்ற வேட்பாளர் துரை வைகோவிற்காக கிராப்பட்டி பீமா நகர், பொன் நகர், மிளகுபாறை பகுதிகளில் வேட்பாளரின் தீப்பெட்டி சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். அவருடன் ம.தி.மு.க. வேட்பாளர் துரை வைகோ, மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன, கிராப்பட்டி செல்வம் உட்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



‘இந்தியா’ கூட்டணியின் கரூர் நாடாளுமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் ஜோதிமணியை ஆதரித்து, புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதி இலுப்பூரில் மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் வரவேற்புரையிலும், சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளருமான எஸ்.ரகுபதி தலைமையிலும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையிலும் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் கரூர் காங்கிரஸ் வேட்பாளர் ஜோதிமணிக்கு வாக்குக் கேட்டு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னதுரை, தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர், விராலிமலை தொகுதி மேற்பார்வையாளர் அஞ்சுகம் பூபதி, காங்கிரஸ் தேர்தல் பொறுப்பாளர் ஆர்.எம்.பழனிச்சாமி, பெரியண்ணன் அரசு மற்றும் பலர் கலந்துகொண்டனர்.